**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.135 /2019**

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 01.07.2025 | தகப்பனார் பெயர்: | சம்மந்தம் |
| பெயர்: | செந்தில்குமார் (PW-3 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | செம்மங்குடி | சமயம்: | |
| தொழில்: | பெயின்டர் | வயது : | 56/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 01.07.2025**

1. வழக்கு சொத்தை வாதிக்கு விற்பனை செய்த சம்மந்தத்தின் மகன்தான் நான் என்றால் சரிதான். செம்மங்குடி ஊராட்சிக்கு உட்பட்ட உட்கிராமம்தான் வில்வராயநத்தம் என்றால் சரிதான். அந்த வில்வராயநத்தத்தில்தான் எனது தகப்பனார் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வசித்து வந்தார் என்றால் சரிதான். அவர் இறந்ததும் அதே ஊரில் தான் என்றால் அதே ஊரில் இல்லை அம்பேத்கார் காலனி தெருவில் இறந்தார் அந்த தெரு செம்மங்குடிக்கு உட்பட்டது. வழக்கு சொத்தை விற்பனை செய்து விட்டு சுமார் 40 வருடங்களுக்கு முன்பு சிவன்கோயில் தெரு அம்பேத்கார் காலனி என்ற முகவரியில் வசித்து வந்தோம். மேற்படி விற்கபபட்ட மனை என்பது ஆதிதிராவிட நலத்துறை சார்பில் ஆதிதிராவிட மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட மனை என்றால் சரிதான். தாவா சொத்துவிற்பனை செய்த போது காலி மனையாக இருந்தது என்றால் சரிதான்

2. ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மனையை மாற்று சமூகத்தினருக்கு விற்க கூடாது என்றால் சரியல்ல. அவ்வாறு சொன்னால் அது தவறு விற்கலாம். ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட மனையை மாற்று

சமூகத்தினருக்கு விற்க கூடாது என்றும் அவ்வாறு விற்பனை செய்தால் செல்லத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வில்வராயநத்தம் என்பது ஒரு குறுகலான ரோடு அதில் கார் கூட செல்லமுடியாது. ஆனால் டிராக்டர் செல்லலாம் என்று கூறுவது தவறு என்று சொல்வது சரியல்ல. வில்வராயநத்திற்கும் வள்ளுவர் தெருவிற்கும் சுமார் 1 கிலோ மீட்டர் இருக்குமா என்றால் இல்லை இரண்டும் ஒன்றுதான். வில்வராயநத்தம் வேறு வள்ளுவர் தெரு என்பது வேறு வழக்கிற்கான நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>